# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1654/25 - 2010 මැයි 21 වැනි සිකුරාදා - 2010.05.21

*1654/25 ஆம் இலக்கம் – 2010 ஆம் ஆண்டு மே மாதம் 21 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி IV (அ) – மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### மேல் மாகாண மாகாண சபை

*மேல் மாகாண மாகாண சபையின் 1991 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, உள்ளூராட்சி நிறுவனங்களின் நிர்வாகங்களை மேற்பார்வை செய்யும் அதிகாரம் தொடர்பான நியதிச் சட்டத்தின் 2 ஆவது பிரிவின் கீழ் நடைபெறும் விசாரணை*

*மேல் மாகாண முதலமைச்சரும், நிதி, திட்டமிடல், சட்டம், ஒழுங்கு, காணி, கல்வி, உள்ளூராட்சி மற்றும் மாகாண நிர்வாகம், மின்சக்தி மற்றும் எரிசக்தி, மனிதவலு மற்றும் வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதார மேம்பாடு தொடர்பான அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க ஆகிய நான், மேல் மாகாணத்தின் மாகாண சபையின் 1991 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்களின் நிர்வாகங்களை மேற்பார்வை செய்யும் அதிகாரம் தொடர்பான நியதிச் சட்டத்தின் 2 (2) ஆம் பிரிவில் கூறப்பட்ட ஏற்பாடுகளுக்கமைய எனக்கு குறித்தொதுக்கப்பட்டுள்ள தத்துவத்தின் பிரகாரம் கீழ் குறிப்பிடப்படும் விடயங்கள்/குற்றங்கள் போன்றவற்றை காரணமாகக் கொண்டு களுத்துறை பிரதேச சபையின் தலைவர் ஜீ. என். பீ. பெரேரா என்பவரினால் கருமங்களை மேற்கொள்ளும் போது மேலே சொல்லப்பட்ட நியதிச் சட்டத்தின் 2 (1) ஆம் பிரிவின் கீழ் காட்டப்பட்டுள்ள குற்றங்கள் செய்யப்பட்டுள்ளனவா என்பதை விசாரணை செய்து 3 மாத காலங்களுக்குள் அறிக்கையொன்றை சமர்ப்பிப்பதற்காக தனி ஆள் விசாரணை ஆணைக்குழுவிற்கு ஓய்வுபெற்ற மேன்முறையீட்டு நீதிபதி, கௌரவ பீ. எல். கே. விமலசந்திர அவர்களை நியமிக்கின்றேன்.*

*விசாரணை செய்யப்படவேண்டிய விடயங்கள்/குற்றங்கள் :-*

*(அ) ஜீ. என். பீ. பெரேரா ஆகிய தாங்கள் களுத்துறை பிரதேச சபையின் தலைவராக இருந்து கருமங்களை ஆற்றும் போது 2009.06.04 ஆந் திகதி அல்லது அதற்கு அண்மித்த திகதி ஒன்றில் களுத்துறை பிரதேச சபைக்கு சேரவேண்டிய நீதிமன்ற தண்டப்பணத்தில் 5% படித்தொகையை உத்தியோகத்தர்களுக்கு கொடுப்பனவு செய்வதற்குரிய 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் II ஆவது பிரிவுடன் சொல்லப்படவேண்டிய அச்சட்டத்தின் 184 ஆவது பிரிவின் கீழ் விதிக்கப்பட்டுள்ள 1988 ஆம் ஆண்டின் பிரதேச சபை (கூட்டங்களில் கருமங்களை மேற்கொள்ளல் தொடர்பான பணிகளின் படிமுறைகள்) விதியின் II ஆவது பிரிவுக்கு முரணாக செயல்பட்டு களுத்துறை பிரதேச சபையின் சபை உடன்பாட்டை பெறுவதற்கு செயல்பட்டமை மேல் மாகாண மாகாண சபையின் 1991 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்களின் நிர்வாகங்களை மேற்பார்வை செய்யும் அதிகாரம் தொடர்பான நியதிச் சட்டத்தின் 2 (1) (அ) மற்றும் /அல்லது 2 (1) (இ) பிரிவு/பிரிவுகளில் கூறப்பட்ட குற்றம்/ குற்றம் புரிதல் எனப்படும் ;*

*(ஆ) ஜீ. என். பீ. பெரேரா ஆகிய தாங்கள் களுத்துறை பிரதேச சபையின் தலைவராக இருந்து கருமங்களை ஆற்றும் போது 2009.06.10 ஆந் திகதி அல்லது அதற்கு அண்மித்த திகதி ஒன்றில் களுத்துறை பிரதேச சபையின் இலக்கம் 131 உறுதிச் சீட்டின் ஊடாக களுத்துறை பிரதேச சபை பொதுநிதியில் ஐந்து இலட்சத்து இருபத்தி எட்டாயிரத்து இருபது ரூபா நாற்பது சதம் (5,28,020.40 ரூபா) அல்லது அதற்கு அண்மித்த நிதித் தொகையை டி. ஏ.பீ. உபசேன மற்றும் யூ. பி. டி. சாந்தி என்ற பெயரின் கீழ் உண்மையற்ற முறையில் கொடுப்பனவு செய்வதற்கு முற்பட்டமை மேல் மாகாண மாகாண சபையின் 1991 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்களின் நிர்வாகங்களை மேற்பார்வை செய்யும் அதிகாரம் தொடர்பான நியதிச் சட்டத்தின் 2 (1) (அ) ஆம் பிரிவில் கூறப்பட்ட குற்றம் புரிதல் எனவாகும்.*

(இ) ஜீ. என். பீ. பெரேரா ஆகிய தாங்கள் களுத்துறை பிரதேச சபையின் தலைவராக இருந்து கருமங்களை ஆற்றும் போது 2009.06.22 ஆந் திகதி அல்லது அதற்கு அண்மித்த திகதி ஒன்றில் களுத்துறை பிரதேச சபையின் 181 ஆம் இலக்கம் கொண்ட கொடுப்பனவு உறுதிச் சீட்டின் ஊடாக களுத்துறை பிரதேச சபை பொது நிதியிலிருந்து பத்து இலட்சத்து ஐம்பத்தி ஏழாயிரத்து ஐநூற்று எழுபத்து ஏழு ரூபா முப்பது சதம் (10,57,577.30 ரூபா) அல்லது அதற்கு அண்மித்த நிதித் தொகையை டி. ஏ. பீ. உபசேன மற்றும் யூ. பி. டி. சாந்தி ஜீ. ஜீ. கம்பன்பிட்டிய யசபால விக்கிரமசிங்க, ஏ. கே. எல். ஜயதிலக்க ஆகிய பெயர்களின் கீழ் உண்மையற்ற முறையில் கொடுப்பனவு செய்வதற்கு முற்பட்டமை மேல் மாகாண மாகாண சபையின் 1991 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்களின் நிர்வாகங்களை மேற்பார்வை செய்யும் அதிகாரம் தொடர்பான நியதிச் சட்டத்தின் 2 (1) (அ) ஆம் பிரிவில் கூறப்பட்ட குற்றம் புரிதல் எனவாகும்.

மேலும் மேல் மாகாண மாகாண சபையின் 1991 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்களின் நிர்வாகங்களை மேற்பார்வை செய்யும் அதிகாரம் தொடர்பான நியதிச் சட்டத்தின் 2 (2) ஆம் பிரிவில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய விசாரணை ஆணைக்குழு சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்டுள்ள ஆணையாளரிடமுள்ள அதிகாரங்களை இவ்விசாரணைக்காக ஓய்வுபெற்ற மேன்முறையீட்டு நீதிபதி, கௌரவ பீ. எல். கே. விமலசந்திர அவர்களுக்கு உரித்தாக்கப்படுவதுடன், இந்நியமனத் திகதியிலிருந்து மூன்று மாத காலத்திற்குள் உரிய விசாரணையை நடாத்தி விசாரணைகளில் எடுக்கப்படவேண்டிய முடிவுகள் பற்றிய அறிக்கையை என்னிடம் சமர்ப்பிக்குமாறு அறிவிக்க விரும்புகின்றேன்.

மேலே கூறப்பட்டுள்ள விடயங்களை விசாரணை செய்யும் போது சேர்த்துக் கொள்ளப்படல் வேண்டும் என இனங்காணப்பட்டுள்ள எழுத்துமூல ஆவணங்கள் மற்றும் வாய்மூல சாட்சி என்பவற்றை கீழ் உள்ள அட்டவணையுடன் உள்ளடக்கப்பட்டுள்ளதென மேலும் அறிவிக்க விரும்புகின்றேன்.

பிரசன்ன ரணதுங்க,
முதலமைச்சரும், நிதி, திட்டமிடல்,
சட்டம், ஒழுங்கு, காணி, கல்வி உள்ளூராட்சி மற்றும்
மாகாண நிர்வாகம், மின்சக்தி மற்றும் எரிசக்தி, மனிதவலு மற்றும்
வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதார மேம்பாட்டு அமைச்சரும்,
மேல் மாகாண மாகாண சபை.

மேல் மாகாண முதலமைச்சு,
"சிராவஸ்தி மந்திரய",
கொழும்பு 07,
2010, மே 19.

**அட்டவணை**

**வாய்மூல சாட்சி** :

1. திருமதி அசோகா குணவர்தன - சிரேஷ்ட விசாரணை அதிகாரி, உள்ளூராட்சி திணைக்களம் (மேல் மாகாணம்).
2. செல்வி நிரோஷா பிரியதர்ஷினி - பதிலாக கடமையாற்றும் தொழிலாளி, களுத்துறை பிரதேச சபை.
3. செல்வி டபிள்யூ. வீ. டீ. அனுஷா இமன்தி ஜயதிலக, முகாமைத்துவ உதவியாளர், களுத்துறை பிரதேச சபை.
4. திருமதி எம். எம். குசுமாவத்தி குமாரிஹாமி, முகாமைத்துவ உதவியாளர், உள்ளூராட்சி திணைக்களம்.
5. திருமதி டபிள்யூ. சி. எச். த சொய்ஷா குணசேகர, செயலாளர், களுத்துறை பிரதேச சபை.
6. பதிவாளர், நீதிவான் நீதிமன்றம், களுத்துறை.

**எழுத்துமூல சாட்சி** :

1. களுத்துறை பிரதேச சபை 2009.06.10 ஆந் திகதிய இலக்கம் 131ஏ, உறுதிச்சீட்டு மற்றும் அதற்குரிய இணைப்பு.
2. களுத்துறை பிரதேச சபை 2009.06.22 ஆந் திகதிய இலக்கம் 181 ஆம் உறுதிச்சீட்டு மற்றும் அதற்குரிய இணைப்பு.
3. களுத்துறை பிரதேச சபை 2009.06.04 ஆந் திகதியின் பொது சபை கூட்ட அறிக்கை.
4. களுத்துறை பிரதேச சபை 2009, யூலை மாத பொது சபை கூட்ட அறிக்கை
5. உள்ளூராட்சி ஆணையாளரின் (மேல் மாகாணம்) 2004.07.06 ஆந் திகதிய இலக்கம் LGD/06/03/01/02 (1) கடிதம்.
6. களுத்துறை பிரதேச சபையின் இலக்கம் 039-1- 001- 2-2997957 இன் வங்கி கணக்குக்குரிய 2009, யூலை மாத வங்கி அறிக்கைப்பத்திரம்.
7. களுத்துறை பிரதேச சபையின் 2009, யூலை மாத கொடுப்பனவு நிதி புத்தகம்.

6- 136

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.